**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.165/2022</u>**

பெயர்–திரு. சிவக்குமார் நாள்.10.03.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) எனக்கு 2–ம் வாதியை 30 ஆண்டுகளாக தெரியும். 2–ம் வாதி எனது உறவினர் இல்லை. தாவா சொத்து ஆதியில் வாதியின் தந்தை கிருஷ்ணசாமிக்கு சொந்தமானது. அதன் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. கிருஷ்ணசாமியிடமிருந்து வாதிக்கு தாவா சொத்து எப்போது கிடைத்தது என எனக்கு தெரியாது. சொத்து விவரங்களும், நீள அகலம், சர்வே எண் போன்றவை எனக்கு தெரியாது. மின் கட்டணம், சொத்து வரி, குடிநீர் வரி யார் பெயரில் உள்ளது என்ற விவரமும் தெரியாது. சரவணன் குடியிருக்கும் வீடு கிழக்கு பார்த்தாற்போல் உள்ளதா என்றால், கிழக்கு வீதியில் வடக்கு பார்த்த வீடு. சரவணன் வீட்டை சுற்றிலும் காம்பௌண்ட் உள்ளதா என்றால், வீட்டை சுற்றி இல்லை. L வடிவில் முன் பக்கத்திலும், வீட்டின் வலப்புறமும் காம்பௌண்ட் சுவர் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 புகைப்படத்தில் காம்பௌண்ட் உள்ளதா என்றால், இல்லை. நான் டிரைவராக வேலை செய்கிறேன். நான் 8–ம் வகுப்பு படித்துள்ளேன். சரவணன் எப்போது தாவா சொத்தில் வீடு கட்டினார் என்றால், அவர் கட்டவில்லை. அவரது அப்பா கட்டின வீடு ஆகும். தாவா சொத்தில் உள்ள வீடு பற்றிய விவரங்கள் தெரியாமல், சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் தாவா வீட்டை சுற்றி பார்க்கும்போது, எல்லைகற்கள் இருந்ததா, இல்லையா என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. சரவணன் வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் இடையில் எத்தனை அடி இடைவெளி உள்ளது என்று எனக்கு தெரியாது.

2) ராஜா, ராணி 1, 2 பிரதிவாதிகள். 1, 2 பிரதிவாதிகளின் வீடும், காலியிடமும் உள்ளது. புதியதாக கட்டிட வேலை நடைபெறாமல் உள்ளது என்றால், சரிதான். 10.08.2022–ல் சண்டை நடக்கும்போது, நான் சம்பவ இடத்தில் அங்கு இருந்தேன். பிரதிவாதிகள் பைப் மற்றும் சன்சைட் எடுக்க வேண்டும் என வாதியிடம் சண்டை செய்தார்கள். பைப், சன்சைட் யார் இடத்தில் உள்ளது என சர்வேயர் உதவியுடன் அளக்கப்பட்டதா என்றால், இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை. வாதிக்காக அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/ her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.10 21:40:40 +0530

District Munsif